Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, HARUR

| | |
|---|---|
| Calendar<br>Misscellancous<br>Preliminary Register<br>Sessions | **Case No. CC 266 /2014** |
| Deposition of **PW1** | Prosecution<br>Defence<br>Court |

| | | |
|---|---|---|
| Name | : | திரு.ரகு |
| Father's Name/Husband Name | : | த/பெ.சுப்ரமணி |
| Village | : | சித்தேரி |
| Taluk | : | அரூர் |
| District | : | தருமபுரி |
| Caste | : | |
| Calling | : | **PW1** |
| Religion | : | இந்து |
| Age | : | 28 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **26th** Day of **July 2022.**

திரு.ரகு

**முதல் விசாரணை**

நான் சித்தேரியில் குடியிருந்து ஓட்டுனராக வேலைபார்த்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் 7 வருடங்களுக்கு முன்பு 1 நாள் இரவு 7 மணியளவில் அரசநத்தம் ஊரில் உள்ள எனது பாட்டி

சின்னமணி வீட்டில் நான் இருந்தபோது எதிரி லட்சுமனன் மதுபோதையில் வந்து வேலை செய்த பணத்தை பிரித்து கொடுப்பது சம்மந்தமாக என்னிடம் தகராறு செய்து என் தலையில் கட்டையால் அடித்து காயப்படுத்தினார். அதன் பின்னர் எனக்கு மயக்கமாகிவிட்டது. அதன் பிறகு நான் அரூர் அரசு மருத்துவமனையில்தான் எனக்கு மயக்கம் தெளிந்தது. மயக்கம் தெளிந்த பிறகு என் பாட்டி சின்னமணி என்னிடம் எதிரி லட்சுமனன் எதிரிகள் ஆண்டி மற்றும் சிவகுமார் ஆகியோர்களை அழைத்துவந்து என் பாட்டி வீட்டில் இருந்த கதவு, ஓடு ஆகியவற்றை எதிரிகள் அடித்து சேதப்படுத்துவிட்டதாக என் பாட்டி சொன்னார். நான் மருத்துவமனையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**புகார் வாக்குமூலம் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). நான் மருத்துவமனையில் ஒரு வாரம் உள் நோயாளியாக சிகிச்சை பெற்றேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என் சொந்த ஊர் சித்தேரி ஆகும். சம்பவம் நடந்த அரசநத்தத்திற்கும் சித்தேரிக்கும் சுமார் 12 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். நான் அரசநத்தத்தில் என் பாட்டி வீட்டில் வசித்து வந்தேன். அரசநத்தத்தைச் சேர்ந்த பெரியசாமி என்பவர் காட்டில் கரும்பு வெட்ட சென்றபோது கொடுத்த கூலி சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டது. நான் கூலி கொடுக்கவில்லை என்றால் நான் கூலி கொடுத்துவிட்டேன். ஆனால் கமிசன் அதிகமாக எடுத்ததாக என்னிடம் பிரச்சனை செய்தார்கள். எனக்கு எழுத படிக்க தெரியாது. சம்பவதினத்தன்று இரவே என்னை அரூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள். நேரம் எனக்கு நியாபகம் இல்லை. நான் நேராக காவல் நிலையம் சென்றேனா என்றால் நான் காவல் நிலையம்

செல்லவில்லை. மருத்துவர் என்னை விசாரித்தபோது நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் எனக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்று சொன்னேன். போலீசார் மறுநாள் காலை 10 மணிக்கு என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றார்கள். புகார் வாக்குமூலத்தை நான் சொல்ல சொல்ல போலீசார் எழுதிக்கொண்டார்கள். அவ்வாறு எழுதி முடித்த பிறகு என்னிடம் படித்து காண்பித்து அதன் பிறகு கையொப்பம் கேட்டார்கள். நான் சொன்னதுபோல்தான் அதில் எழுதியிருந்தார்கள். புகார் வாக்குமூலத்தில் சித்தன் என்பவர் கையில் இருந்த கட்டையால் அடித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் அவ்வாறு சித்தன் பெயரை சொல்லி எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை. லட்சுமனன் என்னை தாக்கியதாக சொல்லும் கட்டையை நான் போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. மருத்துவமனையில் இருந்து நான் சிகிச்சையில் இருந்து வெளியேவந்த பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எனக்கு காலை 6 மணிக்கு மயக்கம் தெளிந்தது. வீட்டில் உள்ள ஓடுகள் உடைந்ததை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். அவ்வாறு நேரடியாக பார்க்காமல்தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். எதிரிகள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரிகளுக்கும் எனக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்சனையை தவிர வேறு பிரச்சனைகள் இல்லை என்றால் சரிதான். நான் விசாரணையில் சொன்னவாறு எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், கூலி பிரித்து கொடுத்து சம்மந்தமாக கேட்ட கூலியை கொடுக்காமல் எதிரிகள் மீது பொய் புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றும், நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**

Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, HARUR

Calendar
Misscellancous
Preliminary Register
Sessions

**Case No. CC 266 /2014**

Deposition of **PW2**

Prosecution
Defence
Court

| | | |
|---|---|---|
| Name | : | திரு.குப்பன் |
| Father's Name/Husband Name | : | த/பெ.காளி |
| Village | : | அரசநத்தம் |
| Taluk | : | அரூர் |
| District | : | தருமபுரி |
| Caste | : | |
| Calling | : | **PW2** |
| Religion | : | இந்து |
| Age | : | 75 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **26th** Day of **July 2022.**

திரு.குப்பன்

**முதல் விசாரணை**

நான் அரசநத்தத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அசா1 ரகு எனக்கு பேரன். எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் 13 வருடங்களுக்கு முன்பு 1 நாள் இரவு 6 மணியளவில் நான்

தோட்டத்தில் இருந்தபோது சிறிய குழந்தைகள் என்னிடம் வந்து அசா1 ஐ கட்டையால் அடித்துவிட்டார்கள் என்று தகவல் சொன்னார்கள். அசா1 ஐ எதிரிகள் மூவரும் சேர்ந்து கட்டையால் அடித்ததாக சொன்னார்கள். அரசநத்தத்தில் உள்ள என் வீட்டில் வைத்து அசா1 ஐ எதிரிகள் அடித்தாக சொன்னார்கள். என் வீட்டிற்கும் என் தோட்டத்திற்கும் சுமார் 1 1/2 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். நான் உடனே என் வீட்டிற்கு சென்று பார்த்தபோது அசா1 அடிப்பட்டு வாசற்படியில் கிடந்தார். உடனே அவரை அழைத்துக்கொண்டு அரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து வந்தேன். நான் வீட்டிற்கு சென்று பார்த்தபோது வீட்டின் கதவு மற்றும் ஓடுகளை எதிரிகள் உடைத்திருந்தார்கள். நான் சென்று பார்த்தபோது எதிரிகள் 3 பேரும் சம்பவயிடத்தில்தான் இருந்தார்கள். ஆனால் அசா1 ஐ மருத்துவமனைக்கு அழைத்து செல்வதற்கு முன்பு எதிரிகள் முதலில் மருத்துவமனைக்கு சென்றுவிட்டார்கள். எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டி அசா1 புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்த மறுநாள் போலீசார் என்னை மருத்துவமனையில் விசாரித்தார்கள். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல்தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன். போலீசார் சம்பவம் நடந்த 2 வது நாள் சம்பவயிடத்திற்கு சென்றார்கள். நான் அப்போது அசா1 னுடன் மருத்துவமனையில் இருந்தேன். நான் போலீசாருடன் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை. அசா1 க்கும் எதிரிகளுக்கும் என்ன கொடுக்கல் வாங்கல் பிரச்சனை என்று எனக்கு தெரியாது. எதிரிகளுக்கு காயம் ஏற்பட்டிருந்ததா என்று எனக்கு தெரியாது. அசா1 ரகு என் மகள்வழி பேரன் ஆவார். அசா1 ரகு என் மகன்வழி பேரன் என்றால் அது தவறாகும். நான் சொன்னதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றும், அசா1 என் பேரன் என்ற

காரணத்தினால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் ஓடுகளை சேதப்படுத்தியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**

Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, HARUR

Calendar
Misscellancous
Preliminary Register
Sessions

**Case No. CC 266 /2014**

Deposition of **PW3**

Prosecution
Defence
Court

| | | |
|---|---|---|
| Name | : | **திருமதி.சின்னமணி** |
| Father's Name/Husband Name | : | **க/பெ.குப்பன்** |
| Village | : | **அரசநத்தம்** |
| Taluk | : | **அரூர்** |
| District | : | **தருமபுரி** |
| Caste | : | |
| Calling | : | **PW3** |
| Religion | : | **இந்து** |
| Age | : | 70 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **26th** Day of **July 2022.**

**திருமதி.சின்னமணி**

**முதல் விசாரணை**

நான் அரசநத்தத்தில் குடியிருந்து வருகிறேன். அசா1 ரகு எனக்கு பேரன். அசா2 என் கணவர். எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் இரவு 7 மணியளவில் நான்

அரசநத்தத்தில் உள்ள என் வீட்டில் இருந்தபோது வாசற்படியில் அசா1 இருந்தபோது எதிரிகள் சிவகுமார், லட்சுமன்ன, ஆண்டி ஆகியோர்கள் தலையில் அடித்து காயப்படுத்தினார்கள். சத்தம் கேட்டு நான் வெளியில் வந்து பார்த்தபோது அசா1 அடிபட்டுகிடந்தார். எதிரிகள் மூவரும் சேர்ந்து என் வீட்டின் கதவை கல்லைக்கொண்டு உடைத்தார்கள். கதவை உடைத்தவுடன் நாங்கள் ஓடிவிட்டோம். அதன் பிறகு எதிரிகள் என் வீட்டின் ஓடுகளை உடைத்திருந்தார்கள். அசா1 ரகுவை அழைத்துக்கொண்டு அரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தோம். எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டி அசா1 புகார் கொடுத்தார். அதன் பிறகு போலீசார் சம்பவயிடத்திற்கு வந்து என் வீட்டை பார்வையிட்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் சம்பவம் நடந்து மறுநாள் என்னை சம்பவயிடத்தில் வைத்து விசாரித்தார்கள். 10 கிலோ எடைக்கொண்ட கல்லைக்கொண்டு எதிரிகள் கதவை உடைத்தார்கள். அதனை நான் நேரடியாக பார்த்தேன். போலீசாரிடம் கல்லை காண்பித்தேன். போலீசார் புகைப்படம் எடுத்துக்கொண்டார்கள். கல்லை போலீசார் எடுத்து செல்லவில்லை. நான் போலீசாரிடம் கல்லைக்கொண்டு கதவை எதிரிகள் உடைத்தார்கள் என்று சொன்னேனா என்றால் சொன்னேன். அசா1க்கும் எதிரிகளுக்கும் என்ன பிரச்சனை என்றால் ஒரு பிரச்சனையும் இல்லை. நான் சொன்னவாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், அசா1 என் பேரன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு எதிரிகள் கல்லைக்கொண்டு கதவை உடைத்திருந்தால் அந்த கல்லை போலீசார் கைப்பற்றியிருப்பார்கள் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.

நீதித்துறை நடுவர் அரூர்.